**செய்தி வெளியீடு எண்: 436** **நாள்: 06.07.2018**

# செய்தி வெளியீடு

கொத்தடிமை தொழிலாளர் மறு வாழ்வு பற்றிய பொருண்மை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு, 01.04.2017 முதல் தொழிலாளர் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கொத்தடிமை தொழிலாளர் தொடர்பாக தொழிலாளர் ஆணையர் மாநில அளவிலான அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். கொத்தடிமை தொழிலாளர்களை பற்றிய மாநில செயல் திட்டம் ஒன்று அரசால் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு தொடர்பாக அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்களும் (அமலாக்கம்) ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு உடனடி மறு வாழ்வு நிவாரண தொகையாக ரூ.20000/– குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், வீட்டுமனை, பட்டா, வேலைவாய்ப்பு கல்வி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து உரிய திட்டங்களின் கீழ் பயன்களை அவர்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**01.04.2017 முதல் 31.03.2018 முடிய 276 கொத்தடிமை தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு அவர்களுக்கு ரூ. 49.05 இலட்சங்கள் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தினை அமல்படுத்தி கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்படும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் ஆகியவை குறித்தான பயிற்சியின் முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டு மே மற்றும் ஜீன் மாதங்களில் 6 நாட்கள் அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்கள், வருவாய் கோட்டாச்சியர் மற்றும் சார் ஆட்சியர்களுக்கும் சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்ட தொழிலாளர் துறை சார்நிலை அலுவலர்களுக்கு 06.07.2018 மற்றும் 07.07.2018 ஆகிய நாட்களில் சென்னையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி முகாமினை மாண்புமிகு தொழிலாளர் நல துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபில் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து தலைமையுரையாற்றினார், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் திரு மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையும், தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்த கோபால், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்றினார்கள். இப்பயிற்சி முகாமில் கூடுதல் தொழிலாளர் ஆணையர், தொழிலாளர் இணை ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் சார்நிலை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**